بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுுல்லாஹுுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 03/09/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுுமுஆ பேருரையின் சுருக்கம்**

**‘அவர் ஒரு வைரமாக இருந்தார். அந்த வைரம் நம்மை விட்டுப் பிரிந்து விட்டது.’ அன்பிற்குரிய சய்யித் தாலிஃ அஹ்மத் ஷஹீத் அவர்களின் ஒளிமயமான பண்புகளைப் பற்றிய நற்குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ـ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த நாள்களில் நமது மிகவும் அன்பிற்குரிய இளைஞர், வாழ்வை அர்ப்பணித்தவர், மதிப்பிற்குரிய சய்யித் ஹாஷிம் அக்பர் சாஹிப் அவர்களின் மகன், அன்பிற்குரிய சய்யித் தாலிஃ அஹ்மத் கானாவில் ஷஹீதாகிவிட்டார்கள். **இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.**

ஆகஸ்ட் 23 - 24 க்கு இடைப்பட்ட இரவு மூன்று பேர் கொண்ட MTA குழு கானாவின் தென்மண்டலத்தில் Recording முடித்துவிட்டு ‘குமாஸி’ வந்து கொண்டிருந்தது. வழியில், ஏழரை மணிக்கு அருகில், கொள்ளையர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதால் அன்பிற்குரிய சய்யித் தாலிஃ அஹ்மதும், உமர் ஃபாரூக் சாஹிப் அவர்களும் காயமடைந்தார்கள்.

சய்யித் தாலிஃ அஹ்மத், மதிப்பிற்குரிய அமத்துல் லத்தீஃப் பேகம் சாஹிபா மற்றும் சய்யித் மீர் முஹம்மத் அஹ்மத் சாஹிப் ஆகியோரின் மகள் வழிப் பேரராவார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களின் மகள் வழிக் கொள்ளுப் பேரராவார்கள். ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்களின் மகன் வழிக் கொள்ளுப் பேரராவார்கள்.

ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் தம்பி ஆவார்கள். இந்த வகையில் இவர்களின் வம்சா வழித் தொடர் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களைச் சென்றடைகிறது. பிறகு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களின் காரணமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடும் உறவு ஏற்படுகிறது. மர்ஹூம், மிர்ஸா குலாம் காதிர் ஷஹீத் அவர்களின் மருமகனும் ஆவார்கள். அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்திருந்தார்கள்.

இவர்கள் Bio Medical Science இல் பட்டம் பெற்ற பிறகு Journalism இல் முதுகலைப் பட்டம் பெற்றார்கள். 2013 இல் வாழ்வை அர்ப்பணித்தார்கள். பிறகு பல்வேறு அலுவலகங்களில் பணிபுரிந்த பிறகு 2016 இல் MTA NEWS இல் முழுநேரப் பணியாளராக பணியமர்த்தப்பட்டார்கள். அங்கு அவர்கள் ஆவணப் படங்களைத் தயாரித்தார்கள். This Week with Huzur என்ற நிகழ்ச்சிக்கு இவர்களே வித்திட்டார்கள்.

இவர்களுக்குத் தமது உள்ளூர் ஜமாஅத் மற்றும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் கீழும் தொண்டுகள் ஆற்றுவதற்கு நல்வாய்ப்பு கிடைத்தது.

அன்பிற்குரிய தாலிஃ அவர்களுக்கு, தரத்திற்கு ஏற்ப ஒரு பணியை முடிக்க வேண்டும் என்ற அசாதாரணமான உத்வேகம் இருந்தது. அதற்காக இவர்கள் எந்த ஆபத்தையும் பொருட்படுத்தியதில்லை. இவர்களின் ஷஹாதத் சம்பவத்திலிருந்தும் இது தான் வெளிப்படுகிறது. 'டமாலே' உடைய மண்டல மிஷனரீ அவர்களின் கூற்றுப்படி இவர்களுக்கு இரவில் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. இருந்தாலும், இவர்கள் நேரக் குறைவு மற்றும் பல பணிகள் நிமித்தமாக இதையே பொருத்தமானதாகக் கருதினார்கள்.

இவர்களுக்கு ஜமாஅத் சொத்துகள் மற்றும் நேரத்தின் மீது எந்த அளவு மதிப்பு இருந்ததென்றால், வழியிலும் **Laptop** இல் தமது பணிகளை செய்து கொண்டிருந்தார்கள். 'பாஹா' ஜங்ஷனுக்கு அருகில் கொள்ளையர்கள் வண்டி மீது துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டனர். இவர்களுக்கு இடுப்பில் குண்டு பட்டது. நிறைய ரத்தம் வழிந்து விட்டது. முதலில் **Poly Clinic** இல் இவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. பிறகு டமாலே டீச்சிங் மருத்துவமனைக்கு சென்று கொண்டிருந்த போது வழியில், சம்பவத்துக்கு ஏறக்குறைய நாலரை மணி நேரத்திற்குப் பிறகு இவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள்.

உமர் ஃபாரூக் சாஹிப் கூறுகிறார்கள்: தாலிஃ அவர்களின் தலை என் மடி மீது இருந்தது. அவர்கள் என்னிடம் மீண்டும் மீண்டும், 'நமக்கு நிகழ்ந்த இந்த சம்பவம் தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டுவிட்டதா?' என்றே கேட்டு வந்தார்கள். ரத்தம் வீணாகி விட்டிருந்த போதும், அளவுகடந்த வேதனை இருந்தும் கூட, இவர்கள் தமது தோழர்களிடம், 'துப்பாக்கிச் சூட்டின் போது நான் **Laptop** ஐயும் மற்ற விலையுயர்ந்த பொருள்களையும் வண்டியின் பின் இருக்கைகளுக்குக் கீழ் தள்ளிவிட்டேன். அவை அங்கு பாதுகாப்பாக உள்ளன. எடுத்துக் கொள்ளுங்கள்!' என்றே கூறினார்கள். இந்த அளவு காயமுற்றிருந்த நிலையிலும் இவர்களுக்கு ஜமாஅத் பொருள்கள் மற்றும் வரலாறு பாதுகாக்கப்படுவது குறித்த கவலை இருந்தது.

உமர் ஃபாரூக் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: "வழியில் என்னிடம் மீண்டும் மீண்டும். '**Tell Huzur that I love him and tell my family that I love them.**' என்றே கூறிவந்தார்கள்."

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* அவர் ஒரு வைரமாக இருந்தார். அந்த வைரம் நம்மை விட்டுப் பிரிந்து விட்டது. அல்லாஹ் கிலாஃபத்திற்கு நன்றியுணர்வுள்ள மற்றும் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை அளிக்கக்கூடியவர்களை ஜமாஅத்துக்கு வழங்கிக் கொண்டே செல்வானாக! ஆனால், இவரின் இழப்பு எத்தகையது என்றால், அது உலுக்கி வைத்து விட்டது. அவர் வாழ்வை அர்ப்பணித்தலின் உயிரோட்டத்தைப் புரிந்தவராகவும் தமது வாக்குறுதியை உண்மையான முறையில் நிறைவேற்றக்கூடியவராகவும் இருந்தார்.

இந்த பௌதீக சூழலில் வளர்ந்த பிள்ளை தமது வக்ஃபைப் புரிந்தார்! அதை நிறைவேற்றினார்! பிறகு அதை உச்சத்துக்கு எட்ட வைத்து விட்டார்! என்று அவரைப் பார்த்து எனக்கு வியப்பு ஏற்பட்டது; இப்போதும் ஏற்படுகிறது. அவர் சான்றோர்களின் சம்பவங்களைத் தனது வாழ்வின் அங்கமாக்கிக் கொள்வதற்காக படித்து வந்தார். கிலாஃபத்தோடு நன்றியுணர்வு மற்றும் கலப்பற்ற தன்மை குறித்த இத்தகைய புரிதலை மார்க்கம் தொடர்பாக ஆழமான அறிவுள்ளவர்களும் கூட கொண்டிருப்பதில்லை. **அவர் கிலாஃபத்தோடு நன்றியுணர்வுடன் நடந்து கொண்டார்.**

**மேலும், எந்த அளவு நன்றியுணர்வை வெளிப்படுத்தினார் என்றால், அவர் வாழ்வு மற்றும் மரணம் என்ற நிலையில் இருந்த போது தனது கடைசி சொற்களில் அவருக்குக் காலத்தின் கலீஃபா அவர்கள் மீதான அன்பு மற்றும் நன்றியுணர்வைப் பற்றிய சிந்தனையே இருந்தது.**

**தமது பிள்ளைகள் மற்றும் குடும்பத்தைப் பற்றிய சிந்தனை எல்லாருக்கும் தான் வருகிறது. ஆனால், ஒவ்வொரு முறையும் தமது பிள்ளைகள் மற்றும் குடும்பத்திற்கு முன்னர் அல்லது அவர்களுடன் காலத்தின் கலீஃபா அவர்கள் மீதுள்ள அன்பின் வெளிப்பாடு குறித்த சிந்தனை யாருக்காவது வருவது அரிதே!**

இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இருக்கும். அவர் கிலாஃபத்துடன் தொடர்பு மற்றும் அன்பின் வெளிப்பாடு உள்ளடங்கிய ஒரு நஸ்ம் எழுதினார். அதை அவர் தமது ஒரு நண்பரிடம் கொடுத்து, உங்களிடம் வைத்துக் கொள்ளுங்கள்! யாரிடமும் காட்டாதீர்கள்! என்று கூறினார். அந்த நஸ்மை, 'நான் எல்லாரை விட அதிகம் காலத்தின் கலீஃபா அவர்களை நேசிக்கிறேன்' என்றே துவங்கியிருந்தார். 'காலத்தின் கலீஃபா அவர்கள் மீது எனக்கிருக்கும் அன்பு நேசம் குறித்து அவர்களுக்கு ஒருபோதும் தெரியவராது' என்று முடித்திருந்தார்.

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* **அன்பிற்குரிய தாலிஃ! உங்களுடைய இந்தக் கடைசி சொற்களுக்கு முன்னரும் கூட எனக்குத் தெரிந்திருந்தது. உங்களுடைய ஒவ்வொரு செயல், ஒவ்வோர் அசைவு, உங்களின் கண்களின் பிரகாசம் மற்றும் முகத்தின் விநோதமான ஒரு வகை பொலிவின் காரணமாக அந்த அன்பு வெளிப்பட்டு வந்தது.**

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* அநேகமாக எனக்கு பிறரிடம் இந்த அன்பு அரிதாகவே தென்படுகிறது. அவருக்குத் தனது பணியோடு ஈடுபாடு இருந்தது என்றால், அதன் மூலம் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் மார்க்கத்தைத் தற்காக்க முடிய வேண்டும் என்பதற்காக இருந்தது.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் நல்லடக்கத்தின் போது எனக்கு வலது பக்கம் வந்து நின்று கொண்டார். நிற்பது யார் என்று அப்போது எனக்குத் தெரியாது. அந்த சந்தர்ப்பத்தில் அந்த 13 வயது சிறுவர், 'நான் காலத்தின் கலீஃபா அவர்களுக்கு உதவியாளனாக ஆவேன்' என்று உறுதிமொழி எடுத்திருப்பார். அவர் கல்வியை முழுமைபடுத்தினார். பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்த வாக்குறுதியை நிறைவேற்றினார்; மிகச் சிறப்பாக நிறைவேற்றினார். 'நான் கிலாஃபத்துக்கு உண்மையான உதவியாளன்' என்று ஷஹீதாகி கூறிச் சென்று விட்டார்.

**அன்பிற்குரிய தாலிஃ! நிச்சயமாக (வாழ்வை) அர்ப்பணித்தல் மற்றும் வாக்குறுதி (யை நிறைவேற்றுதல்) ஆகியவற்றின் உயர்படித்தரங்களை நீங்கள் பெற்றுவிட்டீர்கள் என்று நான் சாட்சி பகர்கிறேன்.**

அவர் காலத்தின் கலீஃபாவின் சொற்கள் படி செயல்பட எப்படியெல்லாம் முயற்சி செய்தார் என்பதை இந்த நிகழ்வின் மூலம் அனுமானிக்க முடிகிறது. முரப்பிமார்களுடனான சில சந்திப்புகளில் நான் அவர்களிடம், 'முரப்பிமார்கள் ஒரு மணி நேரம் வரை தஹஜ்ஜுத் தொழுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்' என்று கூறியிருந்தேன். அன்பிற்குரிய தாலிஃ இதன்படி செயல் பட முயற்சி செய்ய ஆரம்பித்துவிட்டார்.

அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்ப உறுப்பினராக இருக்கும் வகையில் குடும்ப உறுப்பினர்களுக்கும் நன்றியுணர்வு மற்றும் கலப்பற்ற தன்மையின் ஒரு முன்மாதிரியை நிலைநாட்டிச் சென்றுவிட்டார். அவர்

வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கும் வியப்பூட்டும் முன்மாதிரியாக இருந்தார். அவர் பொருளாதார நெருக்கடி அல்லது **Allowance** குறைவாக இருப்பது குறித்து ஒருபோதும் முறையிட்டதில்லை. அவர் அல்லாஹ்விடம், 'அல்லாஹ்வே எனக்கு (நிதி) நெருக்கடி கொடுக்காதே!' என்றே துஆ செய்வார்.

*ஹுஸைர் அவர்கள் கூறினார்கள்:* நான் இவரது நன்றியுணர்வையோ ஓரளவு அறிந்திருந்தேன். ஆனால், இவரது நற்பண்பு மற்றும் இறையச்சத்தின் தரம் மிக உயர்ந்திருந்தது.

ஆமிர் ஸஃபீர் சாஹிப் கூறுகிறார்கள்: தாலிஃ பற்பல திறமைகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள் என்பதை நான் என் கண்களால் கண்டுள்ளேன். அவர்கள் எந்த ஒரு **Project** மீதும் பூஜ்ஜியத்திலிருந்து பணியாற்ற ஆரம்பிப்பார்கள். பிறகு அதைப் பெருமிதத்திற்குரிய விஷயமாக ஆக்கிவிடுவார்கள்.

யூ.கே.வின் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சத்ர் குத்தூஸ் ஆரிஃப் சாஹிப் கூறுகிறார்கள்: எனக்கு அவரோடு குழந்தைப் பருவத்திலிருந்தே தொடர்பு இருந்தது. அவர்கள் ஹஸ்ரத் மலிக் குலாம் ஃபரீத் சாஹிப் அவர்களின் **Short commentary** மற்றும் **Five Volume commentary** ஆகியவற்றை மிகவும் விளக்கமாகப் படித்திருந்தார்கள்.

துணைவியார் ஸத்வத் சாஹிபா கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் எந்த அளவு அன்பு இருந்தது என்றால், அன்னாரைப் பற்றிக் கூறும்போது குழந்தைகளைப் போன்று அழுவார்கள். மகன் தலாலுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கதைகளைக் கூறும் போது தேம்பித் தேம்பி அழுவார்கள். மகன் கிருத்துவ பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார். அவரைப் பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் செல்லும் போது சூரா இக்லாஸ் ஓதிக்காட்டிக் கொண்டே செல்வார்கள். எப்போதாவது காலத்தின் கலீஃபா அவர்களுக்கு ஒரு விஷயம் பிடிக்கவில்லை என்ற சிந்தனை வந்தால், தஹஜ்ஜுதில் உரக்க அழுது அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருவார்கள். அல்லாஹ்வின் மீது அசாதாரணமான நம்பிக்கை இருந்தது. அல்லாஹ் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தான்.

ஷஹீத் அவர்களின் தந்தையார் கூறுகிறார்கள்: அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ் எங்கள் மகனை உயிர்த் தியாகத்துக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். அவரது ஆன்மா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான அன்பில் 1400 ஆண்டுகளுக்கு முந்தைய மக்கா மற்றும் மதீனாவின் வீதிகளில் சுற்றித் திரிந்தது. அவரது உடல் அன்பின் மொத்த உருவமாக இருந்தது.

ஷஹீத் மர்ஹூம் அவர்களின் தாயார் கூறுகிறார்கள்: மகன் வஃபாத் ஆன பிறகு, அவருக்குத் தங்கள் மீது எந்த அளவு அன்பு இருந்தது என்பதை நான் மிக அதிகமாக உணர்ந்தேன்.

மர்ஹூம் அவர்களின் சகோதரி நுத்ரத் சாஹிபா கூறுகிறார்கள்: தாலிஃவின் மார்க்க அறிவு மிகவும் விசாலமாக இருந்தது. நபிமொழிகளை ஆழமாகப் படித்திருந்தார். அரபு மொழியிலும் அதன் இலக்கணத்திலும் பிடிமானம் பெறுவதற்கு முயற்சி செய்வார். அவர்கள் அனைத்து அறிவாற்றல்களையும் இறைநெருக்கத்திற்காகவும், ஜமாஅத்திற்குத் தொண்டாற்றுவதற்காகவும் பயன்படுத்தினார். தாலிஃ ஷஹாதத் தொடர்பாகக் கனவும் கண்டார்கள். அவர்கள் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஆடை அணிந்திருக்கிறார்கள். கொடியை ஏந்திக் கொண்டு சொர்க்கத்தில் நுழைகிறார்கள். ஒவ்வொருவரும் அவர்களை அவர்களது மாமனாரின் பெயரை வைத்து 'மிர்ஸா குலாம் காதிர் வந்துவிட்டார்கள்' என்று அழைக்கிறார்கள்.

அவர்களின் தங்கை கூறுகிறார்கள்: மிகச் சிறந்த **Role Model** ஆக இருந்தார்கள். அலுவலகம் சென்று வரும் போது எப்போதும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் தர்ஸுல் குர்ஆன் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

ஆபித் வஹீத் சாஹிப் கூறுகிறார்கள்: பெரும்பாலும் நான் அவர்களை ஆவணப் படங்களைத் தயாரிக்கும் போது **18, 19** மணிநேரங்கள் பணியாற்றக் கண்டுள்ளேன்.

மிர்ஸா தல்ஹா அஹ்மத் சாஹிப் கூறுகிறார்கள்: தாலிஃவுக்கு **Script** எழுதுவதிலும் பின்னனிக் கதை கூறுவதிலும் திறமை இருந்தது.

நஸீம் பாஜ்வா சாஹிப் கூறுகிறார்கள்: நான் முபல்லிஃக் என்ற வகையில் அவர்களை ஒரு திஃப்லாகக் கண்டுள்ளேன். அவர்கள் நேரத்தைப் பேணக்கூடியவராக, புத்திசாலியாக, மார்க்க அறிவுகளைக் கற்றுக் கொள்வதில் ஆர்வமுடையவராக, கட்டுப்படக்கூடியவராக, விருந்தோம்பல் செய்யக்கூடியவராக, இறைவனை நினைவு கூரக்கூடியவராக, பெரியவர்களை மதிக்கக்கூடியவராக மற்றும் ஆழ்ந்து சிந்திக்கக்கூடியவராக இருந்தார்கள்.

இயக்கத்தின் முரப்பி நவ்ஷீர்வான் ரஷீத் சாஹிப் கூறுகிறார்கள்: நான் மூன்று ஆண்டு காலத்தில் சகோதரர் தாலிஃ அவர்களை முறையாக வியாழக்கிழமை நோன்பு நோற்கக் கண்டிருக்கிறேன்.

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* ஷஹீத் தாலிஃ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பௌதீக சந்ததியாக இருப்பதற்கான உரிமையை நிறைவேற்றிவிட்டார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார். அல்லாஹ் அவரை முஹர்ரம் மாதத்தில் தியாகத்துக்காகத் தேர்ந்தெடுத்தான். அல்லாஹ் அவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலடியில் இடமளித்திருப்பான். ஒருவர் இவ்வாறு கனவும் பார்த்தார்: அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் நிற்கிறார்கள். தாலிஃ ஓடிச் சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கட்டியணைத்துக் கொள்கிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவரை அணைத்துக் கொண்டு, வாருங்கள் மகனே! வருக வருக! என்று கூறுகிறார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜனாஸா ஹாஸிர் தொழவைப்பதாக் கூறி இவ்வாறு துஆ செய்தார்கள்:* அல்லாஹ் அவருடைய மனைவி மக்களுக்குப் பாதுகாவலனாகவும், உதவியாளனாகவும் இருப்பானாக! தாய் தந்தையர், சகோதர சகோதரிகளுக்கு பொறுமையையும் மனதைரியத்தையும் வழங்குவானாக! அவரது சகோதர சகோதரிகளும் அவரது சந்ததிகளும் அவரது நன்மைகளைத் தொடரக்கூடியவர்களாகத் திகழ்வார்களாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ
يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى
وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னி)**